I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES R.W.3
M.C.O.P.NO.112/2020

| | | |
|---|---|---|
| Name | : | Thiru. Gowtham S/o. Loganathan |
| Designation | : | Junior Assistant |
| Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.10.2025

**விசாரணை தொடங்கிய நேரம் : 12.30 p.m**

சாட்சி எதிர்மனுதாரரகள் தரப்பில் அழைப்பாணை அனுப்பப்பட்டு சாட்சி ஆஜர். மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜரானதால் நீதிமன்றம் அவருடைய சாட்சியத்தை பதிவு செய்கிறது.

**முதல் விசாரணை**

நான் வேலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி செய்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அதிகார கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அந்த அதிகார கடிதம் எ.ம.சா.ஆ. 3 ஆகும். அதன் அடிப்படையில் தேவையான ஆவணங்களை கொண்டுவந்துள்ளேன். நீலகண்டன் என்பவருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்று கேட்டு அந்த விவரம் கேட்டு எனக்க அழைப்பாணை வந்தது. அவர் பெயரை எங்கள் அலுவலக கணினியில் தேடி பார்த்தபோது நீலகண்டன் த/பெ. மோகன்ராஜ், பிள்ளையார் கோயில் தெரு, சேண்பாக்கம், வேலூர் என்பவருக்கு எங்கள் அலுவலகம் மூலமாக எந்த ஓட்டுனர் உரிமம் வழங்கப்படவில்லை. எனவே அவருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்று எங்கள் வட்டார போக்குவரத்து அலுவலர் அறிக்கை வழங்கியுள்ளார். என்னுடைய அலுவலகத்தில் நான்

விவரங்களை சரி பார்த்தேன். அதன் அடிப்படையில் ரிப்போர்ட் வழுங்கப்பட்டுள்ளது. அந்த ரிப்போர்ட் எ.ம.சா.ஆ. 4 ஆகும்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னிடம் காட்டப்படும் ஆவணம் ம.சா.ஆ. 4– மோட்டார் வாகன் விபத்து ஆய்வறிக்கை எங்கள் அலுவலகத்தில் அளிக்கப்பட்டதுதான். எங்கள் அறிக்கை படி நீலகண்டன் த/பெ. மோகன் ராஜ் என்பவர் ஓட்டுனர் உரிமம் தாக்கல் செய்யவில்லை என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் அந்த வாகனத்தின் ஓட்டுனர் பெயர் சூரிய பிரகாஷ் த/பெ. சின்ன ராஜு, அவருக்கும் ஓட்டுனர் உரிமம் இல்லை. விபத்திற்கான வாகனத்தை எங்கள் அலுவலகத்திற்கு எடுத்து வந்து எங்கள் அலுவலகத்தில் ஆய்வு செய்வோம். வாகனத்தை வண்டியின் ஓட்டுனரும் காவலரும் எடுத்து வந்தார்கள். மோட்டார் வாகன விபத்து ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் அசல் ஆவணங்கள் அடிப்படையில் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. அசல் ஆவணங்கள் வைத்து தான் சரி பார்த்தோம். இந்த ஆய்வறிக்கையில் கண்டுள்ள TN 23 CB 1184 என்ற வாகனத்தின் உரிமையாளருக்கோ அல்லது ஓட்டுனருக்கோ ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை. விபத்தின் போது அந்த வாகனத்திற்கு காப்பீடு நடைமுறையில் இல்லை என்றால் எங்களிடம் காப்பீடு பாலிசி எதுவும் ஆஜர்ப்படுத்தவில்லை. ஓட்டுனர் உரிமம் இல்லை என்பதால் அபராதம் விதித்தோமா என்றால் தெரியாது. அது அலுவலகத்திற்கு தான் தெரியும். காப்பீடு இல்லை என்றாலும் எங்கள் அலுவலகத்தில் அபராதம் விதிப்போம் என்றால் சரிதான். அவர்கள் எவ்வளவு கட்டினார்கள் என்று தெரியுமா என்றால் அந்த விவரத்தை

எதிர்மனுதாரர்கள் கேட்காததால் கொண்டுவரவில்லை. அவர்கள் கண்டிப்பாக அபராதம் கட்டியிருக்க வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புண்டு ஆனால் கட்டினார்களா இல்லையா என்று எனக்கு தெரியாது.

**விசாரணை முடிந்த நேரம் : 12.45 p.m**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI Digitally signed by G SANTHI Date: 2025.10.14 18:50:29 +0530

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.